16 JAN 1996

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

## 1995 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க

## தேசிய சேமிப்பு வங்கி (திருத்தச்) சட்டம்

---

*(1995, நவெம்பர் 28 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

**அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது**

---

*1995, டிசெம்பர் மாதம் 01 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டுள்ளது.*

இலங்கை அரசாங்க அச்சகத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 7, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

ரூபா : 1.10 தபாற் செலவு ரூபா : 2.00

**1995 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, தேசிய சேமிப்பு வங்கி (திருத்தச்) சட்டம்.**

**[1995, நவெம்பர் மாதம் 28 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]**

**ச. வ.—ஓ. 79/93**

**1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால்** பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1995 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, தேசிய சேமிப்பு வங்கி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். **சுருக்கப் பெயர்.**

2. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடு செய்யப்படும்) 1971 ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தின் 2ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில், "(இதனகத்துப் பின்னர் வங்கி எனக் குறிப்பிடு செய்யப்படும்) "தேசிய சேமிப்பு வங்கி" என அழைக்கப்பட வேண்டியதும் 6 ஆம் பிரிவின்கீழ் அப்போதைக்கு வங்கியின் உறுப்பினர்களாக இருக்கும் ஆட்களைக் கொண்டுள்ளதுமான கூட்டுத்தாபனம் ஒன்று" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "(இதனகத்துப் பின்னர் "வங்கி" எனக் குறிப்பிடு செய்யப்படும்) தேசிய சேமிப்பு வங்கி என அழைக்கப்படும் வங்கி ஒன்று" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. **1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

3. இரண்டாம் பிரிவை நேரே உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 2அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :— **முதன்மைச் சட்டவாக்கத்தின் 2அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.**

"வங்கியின் குறிக்கோள்.

2அ. இலங்கை மக்களிடையே, அதிலும் குறிப்பாக குறைந்த வருமானம் பெறுவோரிடையே சேமிப்பை ஊக்குவிப்பதும் அவ்வாறு திரட்டப்பட்ட சேமிப்புக்களை இலாபகரமாக முதலீடு செய்வதும் வங்கியின் குறிக்கோளாகும்.".

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு, பின்வரும் பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது :— **முதன்மைச் சட்டவாக்கத்தின் 5ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.**

"வங்கியின் மூலதனம்.

5. (1) வங்கியின் அதிகாரமளிக்கப்பட்ட மூலதனம் ஒவ்வொன்றும் பத்து ரூபா கொண்ட ஒரு மில்லியன் பங்குகளாகப் பிரிக்கப்பட்ட பத்து மில்லியன் ரூபாவாதல் வேண்டும்.

(2) வங்கியின் வழங்கப்பட்ட மூலதனம் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், சபையின் ஆலோசனையுடன் அமைச்சரினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும். ஆயின் எவ்வாறாயினும், அத்தகைய வழங்கப்பட்ட மூலதனமானது ஒவ்வொன்றும் பத்து ரூபா கொண்ட நூற்றிருபது மில்லியன் பங்குகளாகப் பிரிக்கப்பட்ட ஒரு பில்லியன் இருநூறு மில்லியன் ரூபாவுக்குக் குறைந்த தொகையாக இருத்தலாகாது.

(3) வங்கியின் எல்லாப் பங்குகளும் திறைசேரிச் செயலாளரின் பெயரில் அவரது உத்தியோகபூர்வத் தன்மையில் வழங்கப்படுதல் வேண்டும் என்பதுடன், எத்தன்மைத்தான எந்த முறையிலும் அவர் அப்பங்குகளைக் கையுதிர்த்தலும் ஆகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவை ஈடுசெய்தல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு, பின்வரும் பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது :—

"வங்கியின் அதிகாரமளிக்கப்பட்ட செயற்பாடுகளும் பணிகளும்.

6. (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக, வங்கியானது பின்வரும் பணிகள் அல்லது செயற்பாடுகள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எவற்றையும் பொறுப்பேற்பதற்கு அதிகாரமளிக்கப்படுகின்றது :—

(அ) வைப்புக் கணக்குகளையும் சேமிப்புக் கணக்குகளையும் திறத்தல், மற்றும் சேமிப்புச் சான்றிதழ்கள் வழங்குதல் என்பன உட்பட, இலங்கையில் சேமிப்புக்களையும் அதன் இடைநேர்வினைவான ஏதேனும் செயற்பாட்டையும் ஊக்குவித்தலும் திரட்டுதலும்;

(ஆ) எவையேனும் பிணையங்கள், தொகுதிக் கடன் முறிகள், திறைசேரி உண்டியல்கள் அல்லது அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட அல்லது உத்தரவாதமளிக்கப்பட்ட ஏதேனும் அத்தகைய நிதிசார் சாதனம் என்பவற்றை கொள்வனவு செய்தலும் அவற்றில் வியாபாரஞ் செய்தலும்;

(இ) பங்குச் சபையினால் காலத்துக்குக் காலம் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முழு மொத்த உச்சவரம்புக்கு அமைவாக, வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பணச் சந்தையில் பணம் கடன் கொடுத்தல்;

(ஈ) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளினதும் ஏனைய நிதி நிறுவனங்களினதும் வாடிக்கையாளர்களுக்குக் கடன் கொடுப்பதற்காக மொத்தக் கடன் கொடுப்பதனைப் பொறுப்பேற்றல்;

(உ) அதன் சொந்த பணவைப்பாளர்களுக்கு அவர்களது பணவைப்புக்களின் பிணைப்பொறுப்புக்கெதிராக சில்லறைக் கடன் கொடுப்பதனைப் பொறுப்பேற்றல்;

(ஊ) அசைவற்ற ஆதனத்தை ஈடுவைப்பதன்மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட பிணைப்பொறுப்பின் மீது வீடமைப்புக் கடன்களை ஏற்பாடு செய்தல்;

(எ) ஏனைய வங்கிகளுடன் நிதிசார் நிறுவனங்களுடனும் கடன் ஒருங்கிணைப்பில் பங்குபற்றுதல்;

(ஏ) அசைவற்ற அல்லது அசைவுள்ள ஆதனத்தைக் கொள்ளுதல் அல்லது அத்தகைய ஆதனத்திலுள்ள எவையேனும் உரிமைகளைக் கொள்ளுதல் அத்துடன் அத்தகைய ஆதனத்தை குத்தகைக்குக் கொடுத்தல், ஈடுவைத்தல், விற்றல் அல்லது வேறுவகையாகக் கையுதிர்த்தல்;

(ஐ) வங்கியினால் கொள்வனவு செய்யப்பட்ட குத்தகைக்கு எடுக்கப்பட்ட அல்லது வேறு வகையாகக் கொள்ளப்பட்ட காணியில் கட்டிடங்களை நிர்மாணித்தல்;

(ஒ) மேலே குறிப்பிடு செய்யப்பட்ட பணிகளின் மற்றும் செயற்பாடுகளின் இடைநேர்வினைவான அல்லது அவற்றுக்கு உகந்தனவாகருக்கக்கூடியவாறான அத்தகைய வேறு செயற்பாடுகளைக் கொண்டுநடாத்துதல்.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பிடு செய்யப்பட்ட நிதிசார் சாதனங்களில் வங்கியினால் முதலீடு செய்யப்படுவதானது, பணச்சபையினால் வேறு வகையாகத் தீர்மானிக்கப்பட்டாலொழிய, வங்கியின் சேமிப்பு மற்றும் வைப்புக் கணக்குகளில் வைப்பிலிடப்பட்ட பணத்தின் அறுபது விதத்திற்குக் குறையாததாக அமைதல் வேண்டும்.".

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு பின்வரும் பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது:— முதன்மைச் சட்டவாக்கத்தின் 8ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

"சபையின் அமைப்பு.

8. (1) சபையானது ஏழு பணிப்பாளர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். அவர்களுள்—

(அ) ஐவர், வங்கியானது அதன் குறிக்கோள்களை அது எய்துவதனை இயலச் செய்யும் அத்தகைய முறையில் வங்கியின் அலுவல்கள் திறமையாகவும் பயனுறுதியுள்ள விதத்திலும் நெறிப்படுத்த வல்லவர்களென அமைச்சர்

கருதும் ஆட்களிடையேயிருந்து அமைச்சரால் நியமிக்கப்படுதல் வேண்டும். (இவர்கள் இதனகத்துப் பின்னர் "நியமிக்கப்பட்ட பணிப்பாளர்கள்" எனக் குறிப்பிடு செய்யப்படுவர்) இவர்களுள் ஒவ்வொருவரும் —

(i) வங்கித் தொழில், வர்த்தகம், வியாபாரம் அல்லது இவற்றையொத்த துறையில் சிரேட்ட முகாமைத்துவ மட்டத்தில் அனுபவம் கொண்டவராக அல்லது நிருவாக அனுபவம் கொண்டவராக; அல்லது

(ii) வங்கித்தொழில், பொருளியல், வர்த்தகம், சட்டம், கணக்கியல், தொழில் முகாமை அல்லது வேறு கற்கை நெறியில் உயர்தொழில் தகைமைகள் கொண்டவராக இருக்க வேண்டும்; அத்துடன்

(ஆ) ஒருவர் திறைசேரிச் செயலாளராக அல்லது அவரின் நியமத்தராக இருக்கவேண்டும்; அத்துடன்

(இ) ஒருவர் அஞ்சல் தலைமை அதிபதியாக அல்லது அவரது நியமத்தராக இருக்க வேண்டும்.

(2) நியமிக்கப்பட்ட பணிப்பாளர் ஒருவர் இறப்பதன்மூலம், பதவி துறப்பதன்மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மூலம் முன்னதாகவே தமது பதவியை வறிதாக்கினாலொழிய, மூன்றாண்டு காலப் பகுதியொன்றுக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(3) அமைச்சர், நியமிக்கப்பட்ட பணிப்பாளர் ஒருவரை பதவியைத் தொடர்ந்திருக்கவிடுதல் வங்கியின் நலன்களுக்கு பாதகமானதெனத் திருப்திப்பட்டவிடத்து, குறித்துரைக்கப்படும் காரணத்தின்பேரில், அப்பணிப்பாளரைப் பதவியிலிருந்து அகற்றலாம்.

(4) நியமிக்கப்பட்ட பணிப்பாளர் ஒருவர் அமைச்சருக்கு முகவரியிட்ட கடிதத்தின் மூலம் தமது பதவியிலிருந்து எந்நேரத்திலும் விலகலாம்; அத்துடன் அத்தகைய பதவி விலகலானது எழுத்தில் அமைச்சரினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் மேல் பயனுடையதாக வருதல் வேண்டும்.

(5) பதவிவிலகுவதன் மூலம் அல்லது காலங்கழிவதன் மூலம் பதவியை வறிதாக்குகின்ற நியமிக்கப்பட்ட பணிப்பாளர் ஒருவர் மீள நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராவார்.

(6) நியமிக்கப்பட்ட பணிப்பாளர் ஒருவர் அவரது பதவிக்காலம் முடிவடைவதன் மூலமல்லாது வேறு வகையாக தமது பதவியை வறிதாக்கினால் அவரின் இடத்துக்கு பணிப்பாளர் ஒருவர் அமைச்சரினால் நியமிக்கப்படலாம், அத்துடன் அவ்வாறு இரண்டாவதாகக் கூறப்பட்ட பணிப்பாளர் அவ்வாறு பதவியை வறிதாக்கும் பணிப்பாளரின் பதவிக் காலத்தில் முடிவுறுதெஞ்சியுள்ள காலத்தின்போது பதவி வகித்தல் வேண்டும்.

(7) நியமிக்கப்பட்ட பணிப்பாளர் ஒருவர் சுகவீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக தமது பதவிக்குரிய கடமைகளைத் தற்காலிகமாகப் புரிய முடியாவிட்டால், அமைச்சர் அவருக்காகச் செயலாற்றுவதற்கென தகுதிவாய்ந்த வேறோர் ஆளை நியமிக்கலாம்.".

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு, பின்வரும் பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 9ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

"சபையின் பணிப்பாளர் ஒருவராக நியமிக்கப்படுவதற்கான தகைமையீனங்கள்.

9. ஆள் ஒருவர்—

(அ) பாராளுமன்ற அல்லது ஏதேனும் மாகாண சபை அல்லது ஏதேனும் உள்ளூர் அதிகார சபை உறுப்பினராக இருந்தால் ; அல்லது

(ஆ) இலங்கையில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின் கீழ், சித்தசுவாதீனமற்றவரெனக் காணப்பட்டால் அல்லது வெளிப்படுத்தப்பட்டால்; அல்லது

(இ) இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின் கீழ் கடனிறுக்க வகையற்றவரென அல்லது வங்குரோத்தானவரென வெளிப்படுத்தப்பட்டு பொறுப்பு விடுவிக்கப்படாத கடனிறுக்க வகையற்றவராக அல்லது வங்குரோத்தானவராக இருந்தால்; அல்லது

(ஈ) நல்லொழுக்கப் பிறழ்வை உள்ளடக்குவதும் ஒரு காலத்துக்கான மறியல் தண்டனையினால் தண்டிக்கப்படற்பாலதுமான தவறொன்றுக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டு இருந்தால்;

அவர் 8ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் சபையின் பணிப்பாளர் ஒருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்திருந்து வருவதற்கு தகைமையற்றவராதல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு பின்வரும் பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது :—

"சபையின் தலைவர்.

11. (1) அமைச்சர், சபையின் பணிப்பாளர்களுள் ஒருவரை அதன் தலைவராக இருப்பதற்கெனப் பெயர் குறித்து நியமித்தல் வேண்டும்.

(2) தலைவர், சமுகமாயிருந்தால், சபையின் கூட்டங்களில் தலைமைதாங்குதல் வேண்டும். தலைவர் ஒருவர் நியமிக்கப்படவில்லையாயின் அல்லது சபையின் கூட்டத்தைக் கூட்டுவதற்கென நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் சமுகமாயிருக்கவில்லையாயின், சமுகமாயிருக்கும் பணிப்பாளர்கள் அத்தகைய கூட்டத்தில் தலைமை தாங்கவென தம்முள் ஒருவரைத் தெரிவுசெய்தல் வேண்டும்.

(3) தலைவரைப் பதவியில் தொடர்ந்திருந்துவர விடுதல் வங்கியின் நலனுக்குப் பாதகமானதென அமைச்சர் திருப்திப்பட்டவிடத்து, அவர் தலைவரைப் பதவியிலிருந்து அகற்றலாம்.

(4) தலைவர் அமைச்சருக்கு முகவரியிட்ட கடிதமூலம் தலைவர் பதவியிலிருந்து எந்நேரத்திலும் விலகலாம். அத்தகைய பதவிவிலகலானது அமைச்சரினால் அது ஏற்றுக்கொள்ளப்பட்டதன்மேல் பயனுறுவதாதல் வேண்டும்.

(5) மூன்றும் (4) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, தலைவரின் பதவிக்காலமானது சபையினில் அவர் உறுப்பினராக இருக்கும் காலப் பகுதியாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்வதன் மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(4) இச்சட்டத்தின் 26 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்படும் வங்கியின் பொது முகாமையாளர், பொது முகாமையாளரின் வேலைபற்றி அல்லது அவரின் பொதுவான நடத்தைபற்றி கலந்தாராயப்படும் ஏதேனும் அத்தகைய கூட்டத்தில் தவிர சபையின் கூட்டங்களில் சமுகமளிப்பதற்கும் பங்குபற்றுவதற்கும் உரிமையுடையவராதல் வேண்டும்.".

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

"நிதி வசதிகள் வழங்குதல்.

17. (1) வங்கியானது கடன்களுக்கு ஏற்புடைத்தான வழமையான வர்த்தக அளவைப் பிரமாணங்களின் அடிப்படையில் இச்சட்டத்தின்கீழ் நிதிவசதிகளை வழங்குதல் வேண்டும்; அத்துடன் அத்தகைய கடன்களுக்காக விதிக்கப்படற்பாலதான நடப்புச் சந்தை வட்டிவீதத்தில் அத்தகைய நிதிவசதி மீதியான திரும்பல் ஒன்றைப் பெற்றுக்கொள்ள முயலுதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், அமைச்சர், இலங்கையின் தேசிய பொருளாதார நலனைக் கருத்திற்கொண்டும், நிதி வசதியை வழங்குதல் பொருளாதாரத்தின் ஏதேனும் துறையை அல்லது உபதுறையை ஆதரிப்பதற்கு அவசியமென அவர் அபிப்பிராயப்படுகின்றவிடத்தும், நிதி வசதி கோரும் விண்ணப்பம் தொடர்பிலான எவையேனும் சிறப்பான சந்தர்ப்ப சூழ்நிலைகளைக் கருத்திற் கொண்டும்—

(அ) சபையின் அபிப்பிராயப்படி வழமையான புத்திசாலித்தனமான வங்கித்தொழில் அளவைப் பிரமாணங்களுக்கு இணங்கவிராத; அல்லது

(ஆ) அத்தகைய கடன் வசதிக்கு வழமையாக வங்கி விதித்திருக்கவேண்டிய வட்டி வீதத்திலும் குறைந்த ஒரு வட்டி வீதத்தில்

ஏதேனும் நிதி வசதியை வழங்குமாறு எழுத்தில் சபைக்குப் பணிக்கலாம்.

(3) (அ) இரண்டாம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் ஏதேனும் பணிப்பு அமைச்சரினால் கொடுக்கப்பட்டவிடத்து திறைசேரிச் செயலாளர், அத்தகைய கடன் வசதியை வழங்குமுன்னதாக, அத்தகைய மீள்கொடுப்பனவு அல்லது வட்டி வருமதியாக வந்ததும், அத்தகைய கடன் வசதியையும் அதன்மீது செலுத்தப்படற்பாலதான வட்டியையும் மீளச் செலுத்துவதற்காக சபைக்கு ஏற்புடைத்தான நியதிகளின்மீது, இலங்கை அரசாங்கத்தின் சார்பில் கைமீட்க முடியாத காலக் கட்டுப்பாடுகொண்ட உத்தரவாதமொன்றைக் கொடுக்கவேண்டும்; அல்லது

(ஆ) இரண்டாம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தி யின்கீழ் ஏதேனும் பணிப்பு அமைச்சரினால் கொடுக்கப் பட்டவிடத்து, திறைசேரிச் செயலாளர், விதிக்கப்பட்ட வட்டிக்கும் அத்தகைய கடன் வசதிக்கும் வங்கி வழமையாக விதித்திருக்கவேண்டிய வட்டிக்கும் இடையே யுள்ள வித்தியாசத்தை வங்கிக்கு மானியமாகச் செலுத்துதல் வேண்டும்; அத்துடன் அத்தகைய மானியமானது ஆண்டுதோறும் அல்லது திறைசேரிச் செயலாளருக்கும் சபைக்கும் இடையே உடன்பட்டுக் கொள்ளக்கூடியவாறான அத்தகைய வேறு கால இடை வெளிகளில் செலுத்தப்படுதல் வேண்டும்; அல்லது

(இ) இரண்டாம் உட்பிரிவின் (அ) அத்துடன் (ஆ) என்னும் பந்திகளின்கீழ் ஏதேனும் பணிப்பு அமைச்சரினால் கொடுக்கப்பட்டவிடத்து, திறைசேரிச் செயலாளர், அத்தகைய கடன் வசதியை வழங்கு முன்னதாக இவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறாக உத்தரவாதமொன்றை வழங்குதல் வேண்டும் என்பதுடன் இவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்டவாறாக மானியத்தைச் செலுத்துதலும் வேண்டும்.

(4) மூன்றும் உட்பிரிவின்கீழ் உத்தரவாதமொன்று ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளவிடத்து, அமைச்சர், வசதியான ஆகக்கிட்டிய சந்தர்ப்பத்தில், உத்தரவாதம் தொடர்பான கூற்றொன்றைப் பாராளுமன்றத்தின் முன்னர் இடுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 17அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்தல்.

11. பதினேழாம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 17அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"அமைச்சருக்கு தகவல்கொடுத்துதவப்பட வேண்டுமென்பது.

17அ. அமைச்சர் காலத்துக்குக்காலம் தாம் தேவைப்படுத்தக்கூடியவாறான வங்கியின் தொழில் தொடர்பான அத்தகைய தகவலை தமக்குக் கொடுத்துதவுமாறு சபையை எழுத்தில் பணிக்கலாம் என்பதுடன் சபை அத்தகைய பணிப்பு ஒவ்வொன்றையும் நிறைவேற்றுதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு பின்வரும் பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது:—

"வங்கியின் செலவுகள்.

19. வங்கியின் பணிகளையும் செயற்பாடுகளையும் நிறைவேற்றுவதில் [illegible] எல்லாச் செலவுகளும் வங்கியின் பணங்களிலிருந்து கொடுக்கப்படுதல் வேண்டும்.".

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

"(1) வங்கியானது, அது பொருத்தமானதெனக்கருதும் அத்தகைய நோக்கங்களுக்காக —

(அ) பொது ஒதுக்கு ஒன்றையும் ; அத்துடன்

(ஆ) வேறு எவையேனும் சிறப்பு ஒதுக்குகளையும்

தாபித்தல் வேண்டும்;" அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "வங்கியின் ஒதுக்குகளுக்கு ஏற்பாடு செய்த பின்பு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "வங்கியின் ஒதுக்குகளுக்கு மாற்றலைச் செய்த பின்பு" என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும்.

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 21, 22 அத்துடன் 23 ஆகிய பிரிவுகள் இத்தால் நீக்கஞ் செய்யப்படுகின்றன. முதன்மைச் சட்டவாக்கத்தின் 21, 22, அத்துடன் 23 ஆகிய பிரிவுகளை நீக்கஞ் செய்தல்.

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு பின்வரும் பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

"பொதுமுகாமையாளரை நியமித்தல்.

26. (1) சபையானது தகுந்தவரும் பொருத்தமானவருமான ஆள் ஒருவரை வங்கியின் பொதுமுகாமையாளராக நியமித்தல் வேண்டும்.

(2) சபையானது வங்கியின் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்காக அவசியமானதென அது கருதக் கூடியவாறான அத்தகைய வேறு உத்தியோகத்தர்களையும் சேவையாளர்களையும் நியமிக்கலாம்.

(3) வங்கியின் பொது முகாமையாளரதும், உத்தியோகத்தர் மற்றும் சேவையாளர்களதும் சம்பளங்கள், படிகள், ஏனைய நலன்கள் சேவை நிபந்தனைகள் என்பன சபையினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.".

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு பின்வரும் பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

"ஆலோசகர்களையும் உசாத்துணைவர்களையும் நியமித்தல்.

27. சபையானது, காலத்துக்குக் காலம், இச்சட்டத்தின்கீழ் அதன் தொழிலை நடாத்துவதற்காகவும் அதன் பணிகளைப் புரிவதற்காகவும் தேவைப்படுவோரான கணக்காளர்கள், சட்டத்தரணிகள், கணக்காய்வாளர்கள், பெறுமதியான மதிப்பீட்டாளர்கள் போன்ற விசேஷ திறமைகள் அல்லது உயர்தொழில் தகைமை

கள் கொண்ட ஆட்களை வங்கிக்கான ஆலோசகர்க ளாகவும் உசாத்துணைவர்களாகவும் நியமிக்கலாம்; அத்துடன் அவ்வாறு நியமிக்கப்பட்ட ஆலோசகர்களும் உசாத்துணைவர்களும் சபை தீர்மானிக்கக்கூடியவா றான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களி லும் ஊதியமளிக்கப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் 29 ஆம் பிரிவுகளை நீக்கஞ் செய்தல்.

17. முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம், 29 ஆம் பிரிவுகள் இத்தால் நீக்கஞ் செய்யப்படுகின்றன.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு பின்வரும் பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது :—

"துர்நடத்தை அல்லது வேண்டுமென்ற தவறுகை மூலமல்லாது வேறுவகையாக விளைவிக்கப்பட்ட சேதத்துக்கு அல்லது இழப்புக்கு பொறுப்பு இன்மை.

30. வங்கியின் பணிப்பாளர், அலுவலர் அல்லது சேவையாளர் எதுவும் அல்லது இச்சட்டத்தின் 27 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட ஆலோசகர் அல்லது உசாத்துணைவர் ஒருவர், வங்கியினால் அடையப்பட்ட ஏதே னும் இழப்புக்கு அல்லது சேதத்துக்கு, அத்தகைய இழப்பு அல்லது சேதம் அவரது துர்நடத்தையினால் அல்லது வேண்டுமென்ற தவறுகையினால் விளைவிக்கப் பட்டிருந்தாலொழிய, பொறுப்புடையவராதலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவைத் திருத்துதல்.

19. முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவு, "வங்கியின் பணிப் பாளர், பொதுமுகாமையாளர், கணக்காய்வாளர், சேவையாளர் ஆலோச கர் அல்லது வேறு உத்தியோகத்தர் அல்லது சேவையாளர் ஒவ்வொரு வரும்" எனும் சொற்களுக்குப் பதிலாக, "வங்கியின் பணிப்பாளர், உத்தி யோகத்தர், சேவையாளர் ஒவ்வொருவரும் இச்சட்டத்தின் 27 ஆம் பிரி வின்கீழ் நியமிக்கப்பட்ட ஆலோசகர் அல்லது உசாத்துணைவர் ஒவ் வொருவரும்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவை திருத்துதல்.

20. முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவு "பணிப்பாளர், பொதுமுகாமையாளர், கணக்காய்வாளர், உத்தியோகத்தர், சேவையாளர், முகவர் நிலைய உறுப்பினர், கணக்காளர் அல்லது வங்கியின் தொழிலில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள வேறு ஆள் ஒவ்வொருவரும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வங்கியின் பணிப்பாளர், உத்தியோகத்தர், சேவையாளர் ஒவ்வொருவரும், இச்சட்டத்தின் 27 ஆம் பிரிவின்கீழ் நிய மிக்கப்பட்டவரும் சபையினால் அவ்வாறு செய்யுமாறு வேலைப்படுத்தப் பட்டவருமான ஆலோசகர் அல்லது உசாத்துணைவர் ஒவ்வொருவரும்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

21. முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவு, "வங்கியின் பணிப்பாளர், பொது முகாமையாளர், கணக்காய்வாளர், செயலாளர், ஆலோசகர், அல்லது வேறு உத்தியோகத்தர் அல்லது சேவையாளர் ஒவ்வொருவரும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வங்கியின் பணிப்பாளர், உத்தியோகத்தர் அல்லது சேவையாளர் ஒவ்வொருவரும் இச்சட்டத்தின் 27 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்படும் ஆலோசகர் மற்றும் உசாத்துணைவர் ஒவ்வொருவரும்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவைத் திருத்துதல்.

22. முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவை திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நேரே உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளை இடுவதன் மூலமும் :—

"(1அ) ஓய்வூதிய நிதியம் தனியான ஒரு நிதியமாக தாபிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் ஐந்தொகையிலிருந்து தனியாகப் பிரிக்கப்பட்டிருத்தலும் வேண்டும்;

(1ஆ) ஓய்வூதிய நிதியத்தில் அதன் பொறுப்புக்களைச் சமாளிப்பதற்குப் போதிய பணம் இருக்கின்றதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக இரண்டு ஆண்டுகளுக்கு, ஒருதடவை நிதியத்தின் ஆயுட் கணக்கு மதிப்பீடொன்று செய்யப்படுதல் வேண்டும்" அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "அசைவற்ற ஆதனத்தின் பிணைப்பொறுப்பு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தின் பிணைப்பொறுப்பு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

23. முதன்மைச் சட்டவாக்கத்தின் 36 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "அமைச்சரின் அங்கீகாரத்துடன் சபையினால் தீர்மானிக்கப்படும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "சபையினால் தீர்மானிக்கப்படும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 36 ஆம் பிரிவைத் திருத்துதல்.

24. முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

"வங்கிக் கணக்கின் கணக்காய்வு.

37. (1) ஒவ்வொரு நிதி ஆண்டுக்குமான வங்கியின் கணக்குகள் நிதியாண்டு முடிவடைந்த மூன்று மாதங்களுக்குள்ளாக கணக்காய்வுக்கென கணக்காய்வாளர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(2) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளை கணக்காய்வு செய்தல் தொடர்பிலான அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் வங்கியின் கணக்குகளைக் கணக்காய்வு செய்வதற்கு ஏற்புடையதாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 39 ஆம் 40 ஆம் பிரிவுகளை நீக்கஞ் செய்தல்.

25. முதன்மைச் சட்டவாக்கத்தின் 39 ஆம், 40 ஆம் பிரிவுகள் இத்தால் நீக்கஞ் செய்யப்படுகின்றன.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 41 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

26. முதன்மைச் சட்டவாக்கத்தின் 41 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"கணக்குகள் மீதான வட்டி.

41. வங்கியினால் வைப்புச் செய்யப்பட்ட பணங்கள் மீது சபையினால் தீர்மானிக்கப்படும் விதங்களில் வட்டி செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும்; எனினும் உரிமை கோரப்படா வைப்புகள் கணக்குக்கு மாற்றப் பட்ட பணங்களுக்கு வட்டி கொடுபடற்பாலதாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 42 ஆம் பிரிவை நீக்கஞ் செய்தல்.

27. முதன்மைச் சட்டவாக்கத்தின் 42ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய் யப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 44 ஆம் பிரிவைத் திருத்துதல்.

28. முதன்மைச் சட்டவாக்கத்தின் 44ஆம் பிரிவானது, அப்பிரிவின் (5), (6), (7), (8), (9), (10) ஆகிய உட்பிரிவுகளை நீக்கஞ் செய்வ தன் மூலமும் அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவ தன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது:—

"(5) நியமித்தர் எவரும், தமது அடையாளம் தொடர்பில் வங்கி ஏற்றுக்கொள்ளத்தக்க சான்றுமூலம் ஆதாரப்படுத்தப்பட்ட விண்ணப்ப மொன்றைச் செய்தாலொழிய, நியமத்தருக்கு வங்கியினால் கொடுப் பனவு எதுவும் செய்யப்படுதலாகாது.

(6) மரணமெய்திய பெயர் நியமனம் செய்தவர் ஒருவரின் நியமத்தர் ஒருவருக்குச் செய்யப்பட்ட ஒரு கொடுப்பனவு, அத்தகைய பெயர் நியமனம் செய்தவரின் வரவில் இருக்கும் பணங்கள் தொடர்பில் வங் கிக்குள்ள கடப்பாடுகளின் பூரண பொறுப்பு விடுவிப்பதாதல் வேண் டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவைத் திருத்துதல்.

29. முதன்மைச் சட்டவாக்கத்தின் 46ஆம் பிரிவானது, "அமைச்சரின் அங்கீகாரத்துடன் அவரது வரவில் இருக்கும் பணத்தை வங்கி தகுந்த தெனக் கருதும் அத்தகைய வேறு ஆளுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "சபையின் அங்கீகாரத்துடன் அவரது வரவில் இருக்கும் பணத்தை வங்கி தகுந்ததெனக்கருதும் அத்தகைய வேறு ஆளுக்கு" என் னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

30. 1982 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு பின்வரும் பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது :—

"கோரப்படா வைப்புகள் ஒதுக்கு.

47. (1) கணக்கொன்று செயலற்றதாக இருக்கின்றவிடத்து, அதாவது—

(அ) சேமிப்புக் கணக்கொன்றின் விடயத்தில் பதினாறு வயதை எய்தியதன்மீது அல்லது அதன் பின்னர் கணக்கொன்றை ஆரம்பித்த ஆள் ஒருவரினால் பத்துவருட காலப்பகுதிக்கு அல்லது பதினாறு வயதை எய்த முன்னர் தமது கணக்கை ஆரம்பித்த ஆள் ஒருவரின் விடயத்தில், பதினாறு வயதை எய்தியதன் மீது அல்லது அதன் பின்னர் பத்து வருட காலப்பகுதிக்கு சேமிப்புப் பண வைப்புப் புத்தகமானது ஒன்றில் அதிலிருந்து பணத்தை எடுப்பதற்காகவோ அல்லது அக் கணக்கில் பணத்தைப் போடுவதற்காகவோ அல்லது வட்டி பதிவதற்காகவோ வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத விடயத்தில், அல்லது

(ஆ) வைப்புக் கணக்கொன்றின் விடயத்தில், பதினாறு வயதை எய்தியதன் மீது அல்லது அதன்பின்னர் கணக்கொன்றை ஆரம்பித்த ஆளொருவரினால் பத்துவருட காலப்பகுதிக்கு அல்லது பதினாறு வயதை எய்தமுன்னர் தனது கணக்கை ஆரம்பித்த ஆள் ஒருவரினால் பத்து வருட காலப்பகுதிக்கு அல்லது பதினாறு வயதை எய்தமுன்னர் தமது கணக்கை ஆரம்பித்த ஆள் ஒருவரின் விடயத்தில், பதினாறு வயதை எய்தியதன்மீது அல்லது அதன்பின்னர் பத்து வருட காலப் பகுதிக்கு முதிர்ச்சியில் தானாகவே புதுப்பிக்கப்படுவதற்கான அறிவுறுத்தல்களை வங்கிக்கு வழங்காமலும் புதுப்பிக்கப்படுவதற்காக வைப்புப் பற்றுச் சீட்டு சமர்ப்பிக்கப்படாமலும் இருக்கும் விடயத்தில்,

அத்தகைய கணக்குகளின் வரவில் இருக்கும் பணங்கள் "உரிமைகோரப்படா வைப்புகள் ஒதுக்கு" என அழைக்கப்பட வேண்டிய விசேட ஒதுக்கொன்றுக்கு மாற்றப்படுதல் வேண்டும்.

(2) உரிமைகோரப்படா வைப்புகள் ஒதுக்குக்கு எந்தக் கணக்கிலிருந்து பணங்கள் கைமாற்றப்பட்டனவோ அந்தக் கணக்கு, அத்தகைய கைமாற்றல் திகதியிலிருந்து, வங்கியின் பொறுப்பாக ஒருபோதும் கருதப்படமாட்டாது.

(3) அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான, உரிமைகோரப் படா வைப்புகள் ஒதுக்கின் வாவில் இருக்கும் பணங்கள் முழுவதும் அல்லது பணங்களின் அத்தகைய பாகம் மூலதனமாக்கப்பட்டு, மூலதன மாக்கப்பட்ட பணத்தின் பெறுமதிக்குச் சமமான பங்குகள் வங்கியினால் திறைசேரிச் செயலாளருக்கு வழங்கப்படலாம்.

(4) உரிமைகோரப்படா வைப்புகள் ஒதுக்குக்கு ஏதேனும் பணம் கைமாற்றப்பட்டதன்பின்னர், (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிடு செய்யப் பட்ட கணக்கொன்றின் வாவில் இருக்கும் பணங்கள் தொடர்பில் வங்கிக்கு ஏதேனும் உரிமைக்கோரிக்கை செய்யப்படுமிடத்து, வங்கியானது, அத்த கைய உரிமைக்கோரிக்கையைப் பரிசீலித்த பின்னர், கணக்கில் இருந்த பணத்தொகைக்குச் சமமான பணத்தொகையொன்றை, கோரிக்கை செய் பவருக்குக் கொடுத்தல் வேண்டும் என்பதுடன் அதன்பின்னர் செலுத்தப் பட்ட பணத்தொகையை மீளளிப்புச் செய்வதற்காக திறைசேரிச் செயலா ளருக்கு விண்ணப்பமொன்றைச் செய்தலும் வேண்டும். திறைசேரிச் செய லாளர், விண்ணப்பத்தைப் பெற்றதன் பின்னர் இயலக்கூடியளவு விரை வாக, கோரப்பட்ட தொகையை திரட்டுநிதியத்திலிருந்து வங்கிக்குச் செலுத்துதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத் தின் 48 ஆம் பிரிவைத் திருத்துதல்.

31. முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவானது அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின், "அசைவற்ற ஆதனத்தின் ஈட்டின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தின் ஈட்டின் அல்லது உத்தரவாத மொன்றின் அடிப்படையின்மீது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில், "அத்தகைய வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஏதேனும் அசைவற்ற ஆதனம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய வங்கிக்கு ஈடுவைக்கப் பட்ட ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத் தின் 50 ஆம் பிரிவைத் திருத்துதல்.

32. முதன்மைச் சட்டவாக்கத்தின் 50 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "கணிசமான அக்கறை கொண்டுள்ள" என்னும் சொற்களுக் குப் பதிலாக, "போதுமான அசைவற்ற ஆதனத்தின் ஈட்டின்மீது வீடொன்றை கொள்வனவு செய்யும் அல்லது நிர்மாணிக்கும் நோக்கத்துக் காக தவிர, கணிசமான அக்கறை கொண்டுள்ள" என்னும் சொற்களை இடு வதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத் தின் 51 ஆம் பிரிவைத் திருத்துதல்.

33. முதன்மைச் சட்டவாக்கத்தின் 51 ஆம் பிரிவானது "ஏதேனும் அசைவற்ற ஆதனத்தின் ஈட்டின்மீது" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தின் ஈட்டின்மீது" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

84. முதன்மைச் சட்டவாக்கத்தின் 60 ஆம் பிரிவு தவிர்ந்த, 52 முதல் 74 வரையான (இரு பிரிவுகளும் உட்பட) பிரிவுகள் இத்தால் நீக்கஞ் செய்யப்படுகின்றன.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 முதல் 74 வரையிலான பிரிவுகளை நீக்கஞ் செய்தல்.

85. முதன்மைச் சட்டவாக்கத்தின் 77 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் (3) ஆம் உட்பிரிவுகளை நீக்கஞ் செய்வதன் மூலமும் அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 77 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(2) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் உத்தியோகத்தர் வங்கியின் பணியாட்டொருதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அவருக்கும் அவர் தொடர்பிலும், ஏற்றமாற்றங்களுடன், ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் உத்தியோகத்தர் வங்கியின் பணியாட்டொருதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்பட்டவிடத்து, 1973 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.".

86. முதன்மைச் சட்டவாக்கத்தின் 78 ஆம் பிரிவு, "கடன் இணக்கக் கட்டளைச்சட்டத்தில் உள்ளது எதுவும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கடன் இணக்கக் கட்டளைச் சட்டத்தில் அல்லது 1988 ஆம் ஆண்டின் 72 ஆம் இலக்க, மத்தியஸ்த சபைகள் சட்டத்தில் உள்ளது எதுவும்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 78 ஆம் பிரிவைத் திருத்துதல்.

87. முதன்மைச் சட்டவாக்கத்தின் 79 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 79 ஆம் பிரிவை நீக்கஞ் செய்தல்.

88. முதன்மைச் சட்டவாக்கத்தின் 81 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 81 ஆம் பிரிவை நீக்கஞ் செய்தல்.

89. முதன்மைச் சட்டவாக்கத்தின் 84 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 84 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அவ்வுட்பிரிவின் (ஈ) மற்றும் (உ) என்னும் பந்திகளை நீக்கஞ் செய்வதன் மூலமும் அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலமும் :—

"(ஈ) வைப்புக் கணக்குகள் மற்றும் சேமிப்புக் கணக்குகள் வைத்திருக்கும் ஆட்களினால் பண வைப்புப் புத்தகங்கள் அல்லது ஏவையேனும் அதையொத்த ஆவணங்கள் பயன்படுத்தப்படுதல் ;

(உ) கணக்குகளின் வகை, வைப்பாளர்களின் வகுப்பு, ஒவ்வொரு தடவையும் எடுக்கக்கூடிய ஆகக்கூடிய பணத்தொகை, பணம் எடுக்கக்கூடிய தடவைகள் என்பன தொடர்பிலான வரையறைகள் உட்பட, பணச்சபையினால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய வரையறைகளுக்கும் மட்டுப்பாடுகளுக்கும் அமைவாக, கணக்குகள் வைத்திருக்கும் ஆட்களினால் காசோலைகள் வரைவதற்கான வசதிகள்.".

(2) அவ்வுட்பிரிவின் (எ), (ஏ), (ஒ), (ஓ), (ஔ), (க), (ங), (ச), (ஞ), (ட), (ண), (த), (ந), (ப), (ம), (ய), (ர), (ல), (வ), (ழ) என்னும் பந்திகளை நீக்குவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 87 ஆம் பிரிவைத் திருத்துதல்.

40. முதன்மைச் சட்டவாக்கத்தின் 87 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) முறையே "அங்கீகரிக்கப்பட்ட சேமிப்புத் தொகுதி" "அதிர்ஷ்டலாபச்சீட்டிழுப்பு", "பெறுமான மதிப்பீட்டாளர் குழாம்" "பரிசப்போட்டி" என்ற சொல்லமைப்புகளின் வரைவிலக்கணங்களை நீக்குவதன் மூலமும் ;

(2) "வர்த்தக வங்கி" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :—

" "வர்த்தக வங்கி" என்பது வங்கித் தொழிலை கொண்டு நடாத்துகின்றதும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றுமாக 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித் தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் உரிமமளிக்கப்பட்டதுமான ஒரு கம்பனி என்று பொருளாகும் ; " ;

(3) "பணிப்பாளர்" என்ற சொல்லின் வரைவிலக்கணத்தை நேரே உடனடுத்து, பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும் :—

" "நிதி வசதி" என்பது வாடிக்கையாளர் சார்பில் வங்கி உத்தரவாதமளித்துள்ளவிடத்து அல்லது வேறு வகையாக பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளவிடத்து, வாடிக்கையாளர் ஒருவர் சார்பில் வங்கியினால் வழங்கப்படும் ஏதேனும் நேரடியான அல்லது நேரடியற்ற முற்பணம் என்று பொருள்படுவதாகும்;";

(4) "விதித்துரைக்கப்பட்ட" என்பதன் வரைவிலக்கணத்தை நேரேபு டனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவ தன் மூலமும் :—

" "மாகாண சபைகள்'' என்பது அரசியலமைப்பின் XVI ஆம் அத்தியாயத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஒரு மாகாண சபை என்று பொருளாகும் ; " ;

(5) "உள்ளூராதிகாரசபை" என்பதன் வரைவிலக்கணத்தை நீக்கஞ் செய்துவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக் கணத்தை இடுவதன் மூலமும் :—

" "உள்ளூர் அதிகாரசபை', என்னும் ஒரு மாநகரசபை, நகர சபை, பிரதேசசபை என்று பொருளாகுமென்பதுடன் ஏதே னும் அத்தகைய சபையினால் பிரயோகிக்கப்படும், புரியப்படும் அத்துடன் நிறைவேற்றப்படும் தத்துவங்களை, கடமைகளை அத்துடன் பணிகளை நேரொத்த அல்லது ஒத்த தத்துவங்களை யும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கு, புரிவ தற்கு அத்துடன் நிறைவேற்றுவதற்கென எழுத்திலான ஏதே னும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட ஏதேனும் அதிகாரசபையையும் உள்ள டக்கும்," ; அத்துடன்

(6) "கொள்வனைகாரர்" என்ற சொல்லின் வரைவிலக்கணத்தை நீக் கஞ்செய்துவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக் விலக்கணத்தை இடுவதன் மூலமும் :—

"'கொள்வனைகாரர்', என்பது சேமிப்புச் சான்றிதழ் தொடர் பாகப் பயன்படுத்தப்படும்போது. இச்சட்டத்தின்கீழ் சேமிப் புச்சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ள ஆள் அல்லது ஆட்கள் குழு என்று பொருளாகும் ; ".

41. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற் றல் வேண்டும். ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

42. ஐயங்களைத் தவிர்ப்பதற்காக, மூதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் தீர்மானம், அப்பிரிவு நீக்கஞ் செய்யப்பட்டது எது எப்படியிருப்பினும் எல்லா நோக்கங்களுக்காகவும் செல்லுபடியும் பயனுறுதியும் கொண்டதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அதிற்கிணங்க, அத்தகைய தீர்மானத்தைப் பின்பற்றிச் செய்யப்பட்ட எல்லாச் செயல்களும் அத்தகைய நீக்கம் எதுவும் இல்லை யென்றாற் போன்று தொடர்ந்து செய்யப்பட்டு பூரணமாக்கப்படலாம். ஐயங்களைத் தவிர்த்தல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 ; (வெளிநாடு) ரூபா 1,859 ; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் ரோட் கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.